மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: ஸ்ப்ரேயர்ஸ் இந்த மாதிரி பழுது பார்ப்பதற்கு 15 நாள் கூடத்தாங்காது. ஏனென்றால் அதற்குள் பூச்சிகள் பயிரைச் சாப்பிட்டுவிடும். ஆகவேதான் மாவட்ட அளவில் என்று கூட அல்லாமல் வட்டார அளவில் செயல்படுத்த தீவிர கவனம் செலுத்தப்படுகிறது. இதற்கு மத்திய அரசு உதவி செய்கிறது என்று ஏற்கனவே சொன்னேன். ஒவ்வொரு வட்டாரத்திலும் ஒன்று ஏற்படுத்தி யிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய வட்டாரத்தில் இல்லையென்றால் ஏற்படுத்துவதற்கு ஏற்பாடு செய்யலாம்.

வேளாண்மைத் துறை மேஸ்திரிகள் சம்பளம்

*368 வினா :— திரு. கே. டி. கே. தங்கமணி: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) பெரியார் திடலில் 1—6—1974 ல் நடைபெற்ற தமிழ்நாடு வேளாண்மைத் துறை மேஸ்திரிகள் சங்க 4 வது மாநில மாநாட்டில், சம்பள வீதத்தை மாற்றியமைப்பது குறித்து நிறைவேற்றப்பட்ட தீர்மானம் அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளதா ?

(இ) ஆமெனில், அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: (அ) ஆம்.

இ) சம்பளத்தை மாற்றியமைக்குமாறு செய்துகொண்ட வேண்டு கோளை அரசு மறுத்துவிட்டது.

திரு. கே. டி. கே. தங்கமணி: சார், இந்தத் தமிழ்நாடு வேளாண்மைத் துறை மேஸ்திரிகள் 6,000 பேர் ஒரே ஸ்தாபனத்தில் இருக்கிறார்கள். அவர்கள் 1—6—1974 செய்யாறு மாநாட்டில் ஒரு தீர்மானத்தைப் போட்டிருக்கிறார்கள். அவர்கள் ஒரு வருஷ பயிற்சி பெற்று இந்த வேலை செய்து வருகிறார்கள். அவர்கள் நிலையில் இருக்கக்கூடிய மற்றவர்களுக்கு முதல் கிரேடுக்கு 200 ரூபாய், இரண்டாம் கிரேடுக்கு 150 ரூபாய் என்று வழங்கப்படும்போது இவர்களை ஒரே கிரேடில் வைத்து 130 ரூபாய் கொடுக்கிறார்கள். ஆகவே, அவர்களுடைய கோரிக்கையைப் பரிசீலனை செய்து, அவர்களுக்கு ஊக்கம் கொடுக்கிற வகையில் மற்றவர்களுக்குக் கொடுக்கும் சம்பள விகிதம் இவர்களுக்கும் கொடுக்கப்பட அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: மொத்தம் 6,000 பேர் என்று சொன்னார்கள். 6,000 பேர் "டெமான்ஸ்ட்ரேஷன் மேஸ்திரி" களாக இருக்கிறார்கள் என்பது சரியான புள்ளிவிபரம் அல்ல. மொத்தம் 3,294 பேர்கள்தான் இருக்கிறார்கள். இது அவர்கள் சொன்னதில் ஏறத்தாழ பாதி அளவு. அவர்களுடைய சம்பள விகிதத்தை மாற்றி அமைப்பது என்பது ஏன் இயலவில்லை என்றால்,

1975 மார்ச் 18]

These demonstration maistries are regarded as last grade Government servants. They are paid the salary appropriate to that grade and they are not given the higher grade because the educational qualification required for demonstration maistries is only ability to read and write.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவரவர்களே, இந்த வேலையில் சேர்ந்திருக்கிற பலர் எஸ்.எஸ்.எல்.சி. தேறியிருக்கிறார்கள். ஒரு வருஷம் பயிற்சியும் பெற்றிக்கிறார்கள். ஆகையால் பி.டபிள்யூ.டி. யில் எப்படி சம்பளம் மேஸ்திரிகளுக்குக் கொடுக்கப்படுகிறதோ அதேமாதிரி இவர்களுக்கும் சம்பளம் கொடுக்க அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவரவர்களே, பி.டபிள்யூ.டி. மேஸ்திரி அல்லது ஹைவேஸ் மேஸ்திரிகளோடு இவர்களை ஒப்பிடுவது சரியல்ல. அவர்கள் குறைந்தபட்சம் எஸ்.எஸ்.எல்.சி. படித்திருக்க வேண்டும் என்ற கட்டாயம் இருக்கிறது. ஆனால் இந்த டெமான்ஸ்ட்ரேஷன் மேஸ்திரிகள் "லாஸ்ட் கிரேடு கவர்ன்மென்ட் சர்வென்ட்" என்ற வகையில் இருக்கிறார்கள். அதை விட உயர்வான நிலை இவர்களுக்குக் கொடுக்க முடியாது ; குறைந்த கல்வித்தகுதிதான் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது.

திரு. கே. டி. கே. தங்கமணி : சார், இவர்கள் செய்யக்கூடிய வேலைக்கும் படிப்புக்கும் சம்பந்தம் இல்லை. இவர்கள் எல்லோருக்கும் ஒரு வருஷ பயிற்சி கொடுக்கப்படுகிறது. செய்கின்ற வேலைகளின் தன்மையில் அல்லது வரன்முறையில் குறைவு இருக்கிறதா என்றால் அதுவும் இல்லை. ஆகவே, இந்தமாதிரியான வேலை செய்கிறவர்களுக்கு குறைந்தபட்சம் ஊதியம் இவ்வளவு கொடுக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். அதை மறுபரிசீலனை செய்து தக்க நடவடிக்கையை அரசாங்கம் எடுக்குமா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : இந்தக் கோரிக்கை பல முறை பரிசீலனை செய்யப்பட்டது. அந்த மாநாட்டில் கூட இந்தக் கோரிக்கை தவிர மற்றக் கோரிக்கைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டன. இதை ஏற்றுக் கொள்ளாததற்கு என்ன காரணம் என்பதைச் சொன்னேன். இவர்கள் "லாஸ்ட் கிரேடு கவர்ன்மென்ட் சர்வென்ட்" தரத்தில் இருக்கிறார்கள். கல்வித் தகுதி குறைவு. "எபிலிட்டி டு ரீட் அண்ட் ரைட்" இருந்தால் போதும். ஆகவே, இவர்களுடைய சம்பளத்தை உயர்த்த இயலவில்லை. உயர்த்திக்கொடுப்பதாக இருந்தால் இவர்கள் தரத்தில் இருக்கிற மற்ற டிபார்ட்மெண்ட் ஊழியர்களுக்கும் இந்த அளவுக்கு உயர்த்திக்கொடுக்க வேண்டியிருக்கும். ஆகவே, இப்போது இருக்கிற சம்பளத்தை உயர்த்திக் கொடுக்க இயலாது.